ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2150/8 - 2019 නොවැම්බර් මස 19 වැනි අඟහරුවාදා - 2019.11.19
*2150/8 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்டதும், 2018.08.03 ஆந் திகதி 2082/61 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான, 2018 ஆம், ஆண்டின் 172 ஆம் இலக்க மற்றும் 2018.08.02 ஆந் திகதிய கட்டளையில் விபரமாக காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிடம் அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு எனினும் அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமை இன்னும் பொறுப்பேற்கப்பட வில்லை. ஆகையால், அச் சட்டத்தின் 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக் களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், 2018.08.03 ஆந் திகதிய 2082/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேல் குறிப்பிடப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 172 ஆம் இலக்க மற்றும் 2018.08.02 ஆம் திகதிய கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல : 4/3/7/2018/HW/65.
பிரதேச செயலாளரின் இல.. : මීරි/ප්‍රා.ලේ/ඉ/3/2018
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம், இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2019, நவெம்பர் 08.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மீரிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 338, கல்கமுவ கிராம அலுவலர் பிரிவில், கல்கமுவ கிராமத்தில் அமைந்துள்ள, கம்பஹா சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரால் 2018.06.04 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுட்டு வரைபட இலக்கம் ජීඒ/එම්ර්ර්/2018/193 இல் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் 'A' மற்றும் 'B'என காட்டப்பட்டுள்ள சுமார் 0.9149 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள்:

*1.* **துண்டு 'A' - கீனவல எஸ்டேட் - விஸ்தீரணம் : 0.6125 ஹெக்டயார்**

வடக்கு : வீதி (பிரதேச சபை) ; கிழக்கு : கே. கே. ஹெட்டிஆரச்சி உரிமை கோரும் மீகஹவத்தை, உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத காணி, எம். எல். கருணாசிறி பெரேரா உரிமை கோரும் மீகஹவத்தை மற்றும் எம். ஏ. பிரதீப் பண்டார உரிமை கோரும் மீகஹவத்தை ; தெற்கு : துண்டு B ; மேற்கு: வீதி (பிரதேச சபை).

*1.* **துண்டு 'B' - கீனவல எஸ்டேட் - விஸ்தீரணம் : 0.3024 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு A ; கிழக்கு : எம். ஏ. பிரதீப் பண்டார உரிமை கோரும் மீகஹவத்தை, எச். எம். டி. சரத் தர்மசிறி ஜயவர்தன உரிமை கோரும் மீகஹவத்தை மற்றும் எச். எம். கே. நாலக கிறிசாந்த குணவர்தன உரிமை கோரும் மீகஹவத்தை ; தெற்கு : வணக்கத்திற்குரிய பஞ்சாலோக தேரர் உரிமை கோரும் தான்சியாவத்தை ; மேற்கு: வீதி (வீ.அ.அ.).

*12-27*

1A – G31495 -26 (2019/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.